2. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

தோட்டக்கலைப் பல்கலைக்கழகம்

***36708—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதிதாக தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்புக்குரிய தளபதி அவர்களை வணங்குகிறேன்.

தோட்டக்கலைப் பயிர்களான மா, பலா, வாழை, தென்னை, காலிஃபிளவர், கேரட், cabbage, turnip, சௌ சௌ, புதினா, கொத்துமல்லி, தக்காளி, ரோஜா, ஜாதி மல்லி, குண்டு மல்லி, கொய்யா, சப்போட்டா, பாக்கு, பீன்ஸ், குடை மிளகாய், கொய் மலர்கள், மாங்கனியில் சிறந்த இரகங்களான அல்ஃபோன்சா,

2020 மார்ச் 13]

மல்கோவா, தோத்தாபுரி, இமாம்பசந்த், பங்கனபள்ளி உள்ளிட்ட 64–க்கும் மேற்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் விளையக்கூடிய மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். இந்த மாவட்டத்தில் பழ பயிர்கள் 36,160 எக்டரிலும், காய்கறிகள் 13,107 எக்டரிலும், வாசனைப் பயிர்கள் 3,410 எக்டரிலும், மலைத் தோட்டப் பயிர்கள் 24 எக்டரிலும், மருத்துவப் பயிர்கள் 52 எக்டரிலும், மலர்கள் 3,038 எக்டரிலும், ஆக மொத்தம் 55,791 எக்டர் பரப்பளவில் தோட்டக்கலைப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் கழகம் கவனத்தில்கொண்டுதான் கடந்த 2006–2011 ஆம் ஆண்டில் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், கலைஞர் அவர்களுடைய உத்தரவின்படி, எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களுடைய பெருமுயற்சியால் 7–1–2011 அன்று சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் தோட்டக்கலைக்கென தனியாக தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஒன்றை கிருஷ்ணகிரி மாவட்டத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவதைப்போல பேசினால் எப்படி சரியாக இருக்கும்? நீங்கள் நன்றாகப் பேசுவீர்கள் என்று எனக்குத் தெரியும். கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வி கேளுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் ஒன்று தனியே அமைக்கப்படும் என்று மேதகு கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டது. அரசாணை எண் 47 (வேளாண்மை தோட்டக்கலைப் பல்கலைக்கழகம்), நாள் 24–2–2011–ன்படி அரசாணையும் வெளியிடப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் திட்ட அலுவலர் முனைவர் இ. வடிவேலு அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கான அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள தனி அலுவலராக நியமிக்கப்பட்டு அறிவிப்பாணை வெளியிடப்பட்டது. இந்தக் கேள்வியை நான் தொடர்ந்து இந்த அவையில் கேட்டு வருகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரியில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்குண்டான முயற்சியில் ஈடுபடுவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்படும் என அப்போதைய அரசு அறிவித்தது. அதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து கருத்துரு பெறப்பட்டு, ஒரு சிறப்பு அலுவலரை நியமித்து, அப்போதைய அரசால் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால், சிறப்பு அலுவலர் பணியினை ஏற்கவில்லை. தற்போது இதுதொடர்பாக அரசு ஆய்ந்து பரிசீலித்து, தோட்டக்கலைப் படிப்பையும், வேளாண்மைப் படிப்பையும் பிரிப்பது மாணவர்கள் நலனுக்கும், வேளாண் கல்வி வளர்ச்சிக்கும் உகந்ததாக இருக்காது என்பதாலும், மேலும், ஒருங்கிணைந்த வேளாண் தோட்டக்கலைக் கல்வியே முழுமையானதாக அமையும் என்பதாலும், வேளாண் பல்கலைக்கழகத்தைப் பிரித்து தோட்டக்கலைக்கென புதிய பல்கலைக்கழகம் அமைக்க வேண்டாமென கொள்கை முடிவு செய்தது.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனைத் தொடர்ந்து தோட்டக்கலைக் கல்வியை வலுப்படுத்த, கோயம்புத்தூர் மற்றும் தேனி மாவட்டம், பெரியகுளம் ஆகியவற்றோடு சேர்த்து, புதிதாக மகளிருக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவலூர் குட்டப்பட்டு ஆகிய இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ், உறுப்புக் கல்லூரிகளாக தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டன. மேலும், இணைப்புக் கல்லூரிகளாக திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டியில்* RVS Padmavathy *தோட்டக்கலைக் கல்லூரியும், ராணிப்பேட்டை மாவட்டம், கலவையில் ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரியும் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல், தோட்டக்கலைக்கென*

2020 மார்ச் 13]

பல்கலைக்கழகம் தொடங்குவதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், வேறு எந்தப் பணிகளும் இன்றைய நிலையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் தோட்டக்கலைப் பயிர்கள் விளைந்துகொண்டிருக்கின்றன, உங்களுக்கே தெரியும். 600 ஏக்கருக்குமேல் தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான இடமும் இருக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடமும் இருக்கிறது; தட்பவெப்ப சூழ்நிலையும் சரியாக இருக்கிறது. 1 இலட்சம் ஏக்கருக்குமேல் மாம்பழம் மட்டும் விளையக்கூடிய மாவட்டமாக இருக்கிறது. மேலும், G9 எனும் பச்சை வாழை, எலக்கி, பூவன், மொந்தை உள்ளிட்ட வாழைப்பழங்கள் அதிகமாக விளையக்கூடிய மாவட்டம். ரோஜா மலர் சாகுபடி— உங்களுக்கே தெரியும்—உலகமெல்லாம் புகழ்பெற்ற ரோஜா மலர் ஓசூரில்தான் விளைவிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த மாவட்டத்தையொட்டி பெங்களூரு, ஐதராபாத் போன்ற பெருநகரங்கள் இருக்கின்றன. மாம்பழ ஜூஸ் தயாரிக்கக்கூடிய 73–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இம்மாவட்டத்தில் இருக்கின்றன. வேளாண்மை, வணிகம் மற்றும் விற்பனைப் படிப்பிற்கு இம்மாவட்டம் மிகவும் உகந்ததாக இருக்கிறது.* ICAR–Indian Council for Agricultural Research *மூலம் தேர்வாகி அகில இந்திய அளவில் உயர் படிப்பிற்காக மாணவர்கள் தமிழ்நாட்டிற்கு வரும்போது இங்கு பல்கலைக்கழகம் இருந்தால் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன், நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டீர்களானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். இல்லை, இது முறையல்ல, (குறுக்கீடு) நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். (குறுக்கீடு) இல்லை, கேள்விதானே கேட்க வேண்டும்?*

[2020 மார்ச் 13

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கே கேட்கிறீர்கள்?

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது எங்கள் தலைவர் காலத்தில் போடப்பட்ட அரசாணை என்பதால், அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கருதி, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைப் பிரித்து தனியாகத் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் கொண்டு வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 77,000 ஹெக்டேரில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. 34,000 ஹெக்டேரில் மா சாகுபடியும், தக்காளி, கத்திரி, பீன்ஸ், முட்டைகோஸ், உருளைக்கிழங்கு போன்ற பயிர்களும் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின்கீழ், திம்மாபுரம் மற்றும் ஜீனூர் ஆகிய இடங்களில் 2 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளும், தளியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் துவங்கப்பட்ட கொய்மலர் மகத்துவ மையம், தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், ஈராண்டு தோட்டக்கலைப் பட்டயப் படிப்புக்கான கல்லூரி ஆகியவை செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறைமூலம் 50 இலட்சம் சதுர மீட்டரில் பசுமைக் குடில்களும், 5 இலட்சம் சதுர மீட்டரில் நிழல்வலைக்கூடமும் அமைக்கப்பட்டு அதில் கொய்மலர் மற்றும் குடைமிளகாய் சாகுபடியும் செய்யப்பட்டு வருகிறது. மேலும், வருடந்தோறும் சுமார் ரூ.100 கோடி அளவிற்கு மானியத் திட்டங்கள் தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர்

2020 மார்ச் 13]

ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் மலர் வணிக வளாகம் அமைக்க ரூபாய் 3 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும், விவசாயிகளுடைய நலன் கருதி, முத்தாய்ப்பாக ஒசூரில் மலர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் சர்வதேச மலர்கள் ஏல மையம் ரூ.20 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, ஏலக்கூடம், சிப்பம் கட்டும் கூடம், அலுவலகக் கட்டடம் மற்றும் தரக் கட்டுப்பாடு ஆய்வகம், குளிர்பதன அறைகள் போன்ற வசதிகளுடன் இம்மலர் ஏல மையம் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 3 பரிவர்த்தனைக் கூடங்கள், 10 உலர்களங்கள், விவசாயிகளின் ஓய்வு அறை, 25 வணிக வளாகக் கடைகள் மற்றும் 6 குளிர்பதனக் கிடங்குகளும் அமைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் விநியோக மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 10 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் ரூ.1 கோடியே 32 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், விலை ஆதரவுத் திட்டத்தில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாக இதுவரை 37 மெட்ரிக் டன் ரூ.20,65,000/–க்கும், கொப்பரை 8.35 மெட்ரிக் டன் ரூ.7 இலட்சத்து 97 ஆயிரத்துக்கும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, தேவையான அளவிற்கு வேண்டிய நலத் திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி நடக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் செயல்படுத்துகின்றார்கள். ஆகவே, தோட்டக்கலைக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*